1972 டிசம்பர் 15]

"பாய்ஸ் கிளப்" இருக்கிறது. ஆண்டுதோறும் போலீஸ் "ஆன்யுவல் ஸ்போர்ட்ஸ்" நடக்கும்போது, அவர்களுக்கெல்லாம் பரிசுகள் கிடைக்கின்றன. அதில் இருக்கிறவர்கள் எல்லாம் எந்தவிதமான குற்றத்திற்கும் சம்பந்தப் பட்டவர்களாகத் தெரியவில்லை. ஆகையினால் இந்தக் கழகங்களில் குற்றம் செய்யாத சிறுவர்களையும் சேர்த்துக் கொள்ளுகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தப் பிள்ளைகள் என்ன குற்றம் செய்திருக்கிறார்கள் என்று அந்த அந்த வட்டாரத்தில் இருப்பவர்களைக் கேட்டால்தான் தெரியும். பொதுவாக நான் ஆரம்பத்திலே கூறியதெல்லாம் குற்றம் செய்து வழக்கு மன்றத்தில் நிரூபிக்கப்பட்டு அதற்குப் பிறகு ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் அல்ல. புகார்கொடுக்கப்பட்டு, அந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட முடியாமல் இருப்பவர்கள், தொடர்ந்து பள்ளிக்குச் செல்லாமலிருக்கும், பொய் பேசிக் கொண்டிருக்கும், வீட்டுக்கு அடங்காத பிள்ளைகளாக இருக்கும், சிறுவர்களைக் குற்றவாளியாக நிரூபிக்க முடியாது. அப்படி அடங்காத பிள்ளைகளை இந்த இடத்தில் கொண்டுவந்து நல்வழிப் படுத்தத்தான் இந்தச் சங்கம் போலீஸ் இலாகா மூலம் நடைபெறுகிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து, குற்றம் செய்யக்கூடிய வாய்ப்பு உள்ள குழந்தைகளை இந்தச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளுகின்றார்கள் என்று தோன்றுகிறது. அப்படியானால், குற்றம் புரிந்து நிரூபிக்கப்பட்டால், சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதில்லை என்று சொல்லப்பட்ட மாதிரி இருக்கின்றது. அப்படியென்றால், குற்றம் புரிந்த குழந்தைகளுக்கு ஏதாவது அசோஸியேஷன் அல்லது என். ஜி. ஓ.க்கள் மூலமாய் யாராவது ஒரு குழுவினை ஏற்படுத்தி அப்படிப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு, அவர்களிடம் நல்ல ஒழுக்கம், டிஸிப்ளின் ஏற்பட ஏதாவது ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அப்படிப் பட்ட குழந்தைகளுக்கு என தனியாகப் பள்ளிக்கூடங்கள், இல்லங்கள் உண்டு என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

Prawn Fishing.

*124 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the places where prawn fishing is done on a large scale in this State ; and

(*b*) the steps taken to expand them ?

இறால் மீன் பிடித்தல்.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இம்மாநிலத்தில் பெருமளவில் இறால் பிடிக்கப்படும் இடங்கள் யாவை ?

(இ) இறால்களை இன்னும் அதிக அளவில் பிடிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இந்த மாநிலத்தில் இறால் மீன் பிடித்தல் கணிசமான அளவுக்கு சென்னை, கடலூர், மண்டபம், தூத்துக்குடி கடற்கரையோரப்பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டக் கரையோரப்பகுதிகளிலும் நடைபெறுகிறது.

(இ) மீனளத் துறையின் கடல் நீர் மற்றும் ஆற்றுநீர் ஆராய்ச்சி நிலையங்களில், தூண்டுதல் முறையில் இறால் மீன் வளர்ப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் "கூன் இறால் கடல் மீனளம்" பற்றிய திட்டம் ஒன்றை மீனளத்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Unemployed Persons.

* †78 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the number of unemployed has increased or decreased in our State during the years 1970–71 and 1971–72;

(*b*) the total number of unemployed who are educated up to S.S.L.C. and above as on 31st March 1972; and

(*c*) the plans under contemplation to reduce unemployment ?

வேலையில்லாதவர்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் நமது மாநிலத்தில் வேலையற்றோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா ?

---

† Postponed from the list of questions for 6th December 1972